
**ஏப்ரல் – 28**

# TNPSC துளிகள்

- முன்னாள் ராணுவத் தளபதி எம்.எம். நரவனே, இந்திய ஆயுதப் படைகளின் அதிகம் அறியப்படாத கதைகள் மற்றும் மரபுகள் குறித்த 'The Curious and the Classified' என்ற புனைகதை அல்லாத புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் (CEA) அசோக் லஹிரி, சுமன் பெரிக்கு பதிலாக நிதி ஆயோக்கின் துணைத் தலைவராக நியமிக்கப்பட உள்ளார்.
  - போபால் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் கோபர்தன் தாஸ், இதன் உறுப்பினராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.
- முதலாம் உலகப் போரில் பங்கேற்ற சுமார் 33,000 இந்திய வீரர்களின் பெயர்கள் ஈராக்கின் பாஸ்ராவில் உள்ள பாஸ்ரா நினைவிடத்தில் டிஜிட்டல் பலகைகள் மூலம் சேர்க்கப் பட்டுள்ளன.
  - நீண்ட காலமாக வரலாற்றில் விடுபட்டிருந்ததைச் சரிசெய்யும் வகையில், காமன்வெல்த் போர் கல்லறைகள் ஆணையத்தால் இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- அசாமில் நிலத்தடியில் வாழும் 'கிட்சாக் நகனா' எனப்படும் புதிய பார்வையற்ற மீன் இனம் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
  - அசாமின் கோல்பாரா மாவட்டத்தில் உள்ள ஒரு கிணற்றில் கண்டுபிடிக்கப்பட்ட இது, வடகிழக்கு இந்தியாவில் காணப்பட்ட முதல் நிலத்தடி நீரில் வாழும் மீன் ஆகும்.
- அன்றாட வாழ்வில் வடிவமைப்பின் முக்கியத்துவம் மற்றும் தாக்கத்தை உணர்த்தும் வகையில் ஏப்ரல் 27 ஆம் தேதி அன்று உலக வடிவமைப்பு தினம் அனுசரிக்கப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பனையூர் தொல்லுயிர் எச்சங்கள் - ஹோலோசீன் காலம்





- தூத்துக்குடி மாவட்டம் பனையூரில் காணப்பட்ட தொல்லுயிர் எச்சங்கள் ஹோலோசீன் காலத்தை (சுமார் 8,000–12,000 ஆண்டுகளுக்கு முந்தையது) சேர்ந்தவை என ஆய்வில்

உறுதி செய்யப்பட்டுள்ளது.

- இந்திய விலங்கியல் ஆய்வகம் (ZSI) கள ஆய்வு மற்றும் அறிவியல் பகுப்பாய்வுகளின் அடிப்படையில் இந்த ஆய்வை மேற்கொண்டது.
- மன்னார் வளைகுடா அருகே கண்டெடுக்கப்பட்ட இந்தத் தொல்லுயிர் எச்சங்களில், முக்கியமாக இருவோட்டு உயிரினங்கள் மற்றும் வயிற்றுக்காலிகள் (gastropods) உள்ளிட்ட நான்கு பிரிவுகளைச் சேர்ந்த 104 மாதிரிகள் அடங்கும்.
- பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நீடிக்கும் சுற்றுச்சூழல் தொடர்ச்சியைக் காட்டும் விதமாக இந்த உயிரினங்கள் தற்போதைய கடல்வாழ் உயிரினங்களை ஒத்திருக்கின்றன.
- இந்தத் தொல்லுயிர் எச்சங்கள் மிதமான நீரோட்டம் மற்றும் வெப்பமான வெப்ப மண்டல நிலைமைகளுடன் கூடிய ஆழமற்ற கடல் மற்றும் முகத்துவாரச் சூழலைக் குறிக்கின்றன.

# தேசியச் செய்திகள்

## சரத்து 21ன் கீழ் நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாக பயணம் செய்வதற்கான உரிமை




- தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாகப் பயணம் செய்வது, அரசியலமைப்புச் சரத்து 21-இன் கீழ் வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதி என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- சாலைப் பாதுகாப்பு என்பது வெறும் நிர்வாகப் பிரச்சினை மட்டுமல்ல, அது அரசின் அரசியலமைப்புச் சட்டம் சார்ந்த கடமை என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- தேசிய நெடுஞ்சாலைகள் மொத்த சாலைகளில் சுமார் 2% மட்டுமே இருந்தாலும், சாலை விபத்து இறப்புகளில் கிட்டத்தட்ட 30% இங்குதான் நிகழ்கின்றன.
- விபத்துகளைக் குறைப்பதற்காக, நெடுஞ்சாலை நிலங்களில் உள்ள அங்கீகாரமற்ற தாபாக்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை நீதிமன்றம் தடை செய்துள்ளது.
- முறையான வசதிகளுடன் கூடிய குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர, நெடுஞ்சாலைகளில் கனரக வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

- மேலும், சிறப்பான கண்காணிப்பு, ரோந்துப் பணிகள் மற்றும் விரைவான நடவடிக்கைக்கு ஆம்புலன்ஸ் போன்ற அவசரகாலச் சேவைகளை மேம்படுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## பிற்கால கர்ப்பக் கலைப்புக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி

- 15 வயது சிறுமியின் 31 வார கர்ப்பத்தைக் கலைக்க இந்திய உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- இனப்பெருக்க சுயாட்சி என்பது அரசியலமைப்புச் சரத்து 21-இன் கீழ் வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதி என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- தேவையற்ற கர்ப்பத்தை தொடர ஒரு சிறுமியை வற்புறுத்துவது கண்ணியம், தனி உரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை மீறுவதாகும் என நீதிமன்றம் தெரிவித்து உள்ளது.
- அச்சிறுமியின் கடுமையான மன உளைச்சல் மற்றும் அவரது நல்வாழ்வுக்கான ஆபத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- மருத்துவ ரீதியான கர்ப்பக் கலைப்புச் சட்டம் பொதுவாக 24 வாரங்கள் என்ற வரம்பை நிர்ணயித்திருந்தாலும், இந்த வழக்கில் நீதிமன்றம் விதிவிலக்கு அளித்துள்ளது.
- குறிப்பாக விதிவிலக்கான சூழ்நிலைகளில், ஒரு பெண்ணுக்குத் தனது உடலின் மீதான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை இத்தீர்ப்பு வலியுறுத்துகிறது.




## தீவிர சிகிச்சைப் பிரிவு (ICU) குறித்து இந்தியாவின் தரநிலைகள்

- இந்தியா முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கான (ICU) குறைந்தபட்ச தரநிலைகளை இந்திய உச்ச நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது.
- நாடு முழுவதும் ஒரே மாதிரியான ICU உள்கட்டமைப்பு, பணியாளர்கள் மற்றும் நோயாளிகளின் கவனிப்பை உறுதி செய்வதை இந்த வழிகாட்டுதல்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- ஒவ்வொரு ICU-விலும் ஆக்ஸிஜன் விநியோகம், செயற்கை சுவாசக் கருவிகள்,

கண்காணிப்புக் கருவிகள், இதயத் துடிப்பு சீராக்கிகள் மற்றும் தடையில்லா மின்சார வசதி போன்ற அத்தியாவசிய வசதிகள் இருக்க வேண்டும்.

- 24 மணி நேரமும், பயிற்சி பெற்ற மருத்துவர்கள், கடுமையான நோய்த் தொற்றுக் கட்டுப்பாடு மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளுக்கு 1:1 என்ற செவிலியர்-நோயாளி விகிதம் ஆகியவற்றை இந்த விதிமுறைகள் கட்டாயமாக்குகின்றன.
- நகர்ப்புற மற்றும் கிராமப்புற மருத்துவமனைகளில் தரமான சிகிச்சையை வழங்குவதற்காக ICU-க்கள் வெவ்வேறு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் செயல்திட்டங்களைச் சமர்ப்பிக்கவும், இவற்றைச் செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளைக் கண்டறியவும் அறிவுறுத்தப் பட்டுள்ளன.





## சுற்றுச்சூழல் செய்திகள்

### நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு 2026

- நீலகிரி வரையாடு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாடுகளைக் கணக்கெடுக்கும் மூன்றாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு, மேற்கொள்ளப்பட்டது.
- மாநிலங்களுக்கு இடையே இடம்பெயரும் விலங்குகளை இருமுறை கணக்கிடுவதைத் தவிர்ப்பதற்காக, கேரள வனத்துறையுடன் இணைந்து மேற்குத் தொடர்ச்சி மலையில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- இது கன்னியாகுமரி முதல் கூடலூர் வரையிலான 3,100 கிலோமீட்டருக்கும் மேற்பட்ட பரப்பளவில் 14 வனக்கோட்டங்கள், 43 வனச்சரகங்கள், 124 வனப்பிரிவுகள் மற்றும் 177 கணக்கெடுப்புத் தொகுதிகளை உள்ளடக்கியது.
- நிகழ்நேரத் தரவுச் சேகரிப்பு, GPS கண்காணிப்பு மற்றும் தரவறிக்கைக்காக "வருடை" என்ற அலைபேசி செயலி பயன்படுத்தப்பட்டது.
- முந்தைய கணக்கெடுப்புகளில் 2024 ஆம் ஆண்டில் 1,031 நீலகிரி வரையாடுகளும், 2025 ஆம் ஆண்டில் 1,303 வரையாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இது இவற்றின் எண்ணிக்கை உயர்வு மற்றும் வாழ்விட மறுசீரமைப்பைக் காட்டுகிறது.




## பிச்சாவரம் சதுப்புநிலச் சூழலமைப்பு - நுண்நெகிழி மாசுபாடு




- ❖ பிச்சாவரம் சதுப்புநிலச் சூழலமைப்பில் உள்ள மீன்கள் மற்றும் ஓடுடைய நீர்வாழ் உயிரினங்களில் அதிக அளவில் நுண்நெகிழி மாசுபாடு இருப்பதாக சமீபத்திய ஆய்வொன்று தெரிவித்துள்ளது.
- ❖ பருவமழைக் காலங்களில் நெகிழிக் கழிவுகளை இப்பகுதிக்கு அடித்து வரும் அதிகப் படியான நீர்வரத்து காரணமாக, நுண்நெகிழி அளவு சுமார் 45% என மிக அதிகமாக காணப்பட்டது.
- ❖ மடவை மற்றும் கரிமீன் போன்ற மீன்களும், நீல நீச்சல் நண்டு மற்றும் சேற்று நண்டு போன்ற ஓடுடைய உயிரினங்களும் அதிக அளவிலான நுண்நெகிழிகளை உட்கொண்டுள்ளது தெரியவந்துள்ளது.
- ❖ இவற்றில் சுமார் 32% துகள்கள் 1 மில்லிமீட்டருக்கும் குறைவான மிகச் சிறிய அளவிலானவை என்பதோடு இவை பெரும்பாலும் பாலிஎதிலீன், பாலிப்ரொப்பிலீன் மற்றும் PET போன்ற பொதுவான பிளாஸ்டிக்குகளால் உருவாக்கப்பட்ட நீலம் மற்றும்

சிவப்பு நிற இழைகளாகும்.

- ❖ சதுப்புநிலத் தாவரங்களின் வேர்கள் மற்றும் வண்டல் மண் இந்த நெகிழிகளைத் தடுத்து நிறுத்துவதால், இவை அங்கே தேங்கி உணவுச் சங்கிலிக்குள் நுழைந்து சுற்றுச்சூழல் அபாயங்களை உருவாக்குகிறது.

# மாநிலச் செய்திகள்

## எழுச்சிமிகு கிராமங்கள் திட்டம்-II - கதுவா கிராமங்கள்




- ❖ ஜம்மு காஷ்மீரின் கதுவாவில் உள்ள ஆறு எல்லைக் கிராமங்கள் துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.
- ❖ சர்வதேச எல்லையில் அமைந்துள்ள போபியா, கத்யலா, கஜ்னால், கரோல் கிருஷ்ணா, ரத்துவா மற்றும் குஜ்ஜர் சக் ஆகியவையே தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களாகும்.
- ❖ இப்பகுதிகளில் சாலைகள், சுகாதாரம், கல்வி, மின்சாரம் மற்றும் குடிநீர் போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ நலத்திட்டங்கள் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைவதையும், தகுதியான அனைத்து குடும்பங்களுக்கும் முழுமையாகக் கிடைப்பதையும் இது நோக்கமாக / மையமாகக் கொண்டுள்ளது.
- ❖ தொலைதூர மற்றும் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த எல்லைக் கிராமங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசால் நிதியுதவி செய்யப்படும் திட்டம் இதுவாகும்.
- ❖ இது ஜம்மு காஷ்மீரில் மக்கள் இடம்பெயர்வதைக் குறைக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் உதவுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★